Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★

# ஈழநாடு

THE EELANADU
Nationa Tamil Daily

தபால் பெட்டி எண்; 49
போன் 389
தேசிய தினசரி
மலர் 23
இதழ் 107

யாழ்ப்பாணம் வைகாசி 16 சாதாரண ஆண்டு 5 ஞாயிற்றுக்கிழமை (30-5-71)

ஜோன்ஸன்
அவுட்போட் மோட்டர்
யந்திர உதிரிப்பாகங்கள்
(6-H. P. — 20-H. P.)
எம்மிடம்
இப்பொழுது
பெற்றுக்கொள்ளலாம்.
விஷ்ணு
ஹாட்வெயார் ஸ்ரோர்ஸ்
யாழ்ப்பாணம் வீதி, வல்வெட்டித்துறை.
போன்: 34

# ஜூன் 9-ம் திகதியே பாடசாலைகள் ஆரம்பம்!

கோட்டை, சனி

ஜூன் 9-ம் திகதி சகல அரசாங்கப் பாடசாலைகளும் திறக்கப்படும் முன்னர் தெரிவித்தபடி ஜூன் 2ந் திகதி ஆரம்பமாக மாட்டாதுகல்வி அமைச்சு இன்று இந்தத் தகவலை வெளியிட்டது.

கொழும்பில் வேகமாக இப்போது பரவிவரும் கண்ணோய் காரணமாகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொழும்பில் பரவியகண்ணோயை தொடர்ந்து நாட்டின்பல பகுதிகளிலும் அது தலைவிரித்தாடுவதை அடுத்தே இந்த நடவடிக்கையை கல்வி அமைச்சு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் உயர்அதிகாரிஒருவர்தெரிவித்தார்

மே 22ம் திகதி முதல் ஜூன் 1ம் திகதிவரை ஆசிரியர்களுக்கு விடுமுறை விடப்பட்டு பாடசாலைகள் ஜூன் 2ந் திகதி ஆரம்பமாகும்போது சமூகமளிக்கும்படி கல்வி அமைச்சு முன்னர் அறிவித்தது

கல்வி அமைச்சு இன்று வெளியிட்ட அறிக்கையில் ஜூன் 9ம் திகதிவரை பாடசாலைகள் ஆரம்பமாகும் தினத்தை இப்போது பின்போடப்பட்டுள்ளதாகத் தெரிவித்தது

இந்த அறிவித்தல் பாடசாலைகளுக்கு மட்டுமே பொருந்துமென்றும் அறிவிக்கப்பட்டது

சகல தனியார்துறை பாடசாலைகளும் ஜூன 9ம் திகதியே ஆரம்பமாக வேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டது

கொழும்பு பேராதனை பல்கலைக்கழகம் தொழில்நுட்பக்கல்லூரிகள் பயிற்சிக் கல்லூரிகள் ஆகியன ஜூன் 2ந்திகதியே குறிப்பிட்டபடி ஆரம்பமாகுமென்றும் அறிவிக்கப்பட்டது

# பஸ், ரயில், விமான கட்டணம் ஏன் உயர்கிறது?

## போக்குவரத்து மந்திரி லெஸ்லி விளக்குகிறார்

கோட்டை, சனி

**ஜூன் முதலாம் திகதிமுதல் பஸ், ரயில், விமான சேவைக்கட்டணங்களை உயர்த்துவதற்கான காரணம் என்ன?**

**போக்குவரத்து அமைச்சர் திரு. லெஸ்லி குணவர்த்தனா இதற்கான காரணத்தை பொதுமக்களுக்கு விளக்கியுள்ளார்.**

**அவர் இவ்விளக்கத்தில் தெரிவித்துள்ளதாவது;-**

இந்த ஆண்டு ஜூன் முதல் தேதி முதல் ரயில், பஸ், உள்ளூர் விமானக் கட்டணங்கள் ஆகியன உயர்த்தப்பட்டுள்ளன இதற்கான காரணத்தை பொதுமக்கள் அறியவேண்டும்.

முதலில் இ. போ. ச பஸ் சேவையை எடுத்துக்கொள்வோம். பஸ்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. அடிக்கடி பஸ்கள் பழுதடைகின்றன. பிரயாணிகள் வசதியீனங்களுக்குள்ளாகின்றனர் பஸ்களில் தினமும் 40 லட்சம் பிரயாணிகள் பிரயாணம் செய்கின்றனர் நாட்டின் சேவைக்கு நாளொன்றுக்கு 5, 285 பஸ்கள் தேவை ஐக்கிய முன்னணி அரசு பதவிக்கு வந்தபோது 5, 600 பஸ்கள் இருந்தன அதில் 1140 பஸ்கள் திருத்தப்படாமலிருந்தன 4 460 பஸ்களிமட்டுமே சேவையிலீடுபட்டிருந்தன 1365 பஸ்கள் பற்றாக்குறையாக இருந்தன அதாவது 24 வீதம் வரை பற்றாக்குறையாக இருந்தது இதனால் பிரயாணிகள் பெருத்த கஷ்டத்துக்குள்ளாகினார்கள் பிரயாணிகள் பஸ்களில் இடம் பிடிக்க முடியாமலும் "கியூ" வரிசையில் நின்று இக்கு முக்குப்பட வேண்டிய நிலையும் ஏற்பட்டது பஸ்களுக்கு பெருத்த தட்டுப்பாடு ஏற்பட்டதுடன் பொறியல் ஊழியர் பற்றாக்குறை கூடுதலாக இருந்தது.

அதே நேரத்தில் தேவை முந்திய அரசு 15 ஆயிரம் ஊழியர்களை நியமித்தது இதனால் சபைக்கு மேலும் நஷ்டம் ஏற்பட்டது ஆனால் தேவையான புதிய பஸ் டிப்போக்களையோ அன்றி கராச்களையோ முந்தியசபை நிறுவவில்லை புதிய நிர்வாக சபை பதவி ஏற்றதும் இ. போ. ச. வுக்கான பரிகாரம் குறித்து சிபார்சு செய்தது பஸ்களை அதிகரிக்க வேண்டுமென்றும் அது சிபார்சு செய்தது பழுது பார்க்கும் பகுதியை நிரப்புவது என்றும், ஓடு வேலைப் பகுதியைச் சீர்படுத்தி, டிப்போக்களையும், கராஜ்களையும் நிறுவுவதென்றும் தீர்மானித்தது-

அடுத்தமாதமுடிவில் புதிய பஸ்களை சேவையில் ஈடுபடுத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது சுமார் 360 புதிய பஸ்களுடன் பழுதடைந்த பஸ்களில் 500 பஸ்களையும் சேவையிலீடுபடுத்த நடவடிக்கைமேற்கொள்ளப்பட்டுள்ளது இவற்றுக்கெல்லாம் மூலதனம் தேவை பஸ்கம்பனி முதல எிமார் காலத்திலிருந்தே பஸ்கட்டணத்தில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை 13 வருடகாலமாக எவ்விதமாற்றமும் பஸ்கட்டணத்தில் ஏற்படவில்லை

இந்த இடைப்பட்டகாலத்தில் உதிரிப்பாகங்கள் எரிபொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன 1953ம் ஆண்டில் ஒரு கலன் டீசலின் விலை ரூ 1-11சதம் ஆகும் இப்போது ரூ 1-80 ஆக உயர்ந்துள்ளது 1953ம் ஆண்டு பஸ் ஒன்றின் விலை 49 ஆயிரம் ரூபாய் இன்று பஸ் ஒன்றின் விலை 80 ஆயிரம் ரூபாயாகும் 13 ஆண்டு காலத்துக்கு முன்னர் 15 ஆயிர ஊழியர்கள்வேலைசெய்தனர் ஆனால் இன்று 45 ஆயிரம் ஊழியர்கள் வேலைசெய்கின்றனர். இப்போதுசம்பளமும் அதிகரிக்கப்பட்டுள்ளது அவசரகாலச் சட்டம் அமுலாகு முன்னர் 52 லட்சம் ரூபாய் தினமும் நஷ்டம் ஏற்பட்டது அவசரகாலச் சட்டம் அமுலாகியபின்னர் 1 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது. தற்போதைய கட்டணங்களுடன் தொடர்ந்து சேவையிலீடுபடுத்த முடியாது உலகத்திலேயே மிகக் குறைந்த கட்டணத்துடன் பஸ்சேவை இலங்கையில்தான் நடக்கிறது

பஸ்கட்டணத்தை உயர்த்த தீர்மானித்தது. ஒருபகுதிக்கு மட்டுமல்ல நாட்டின் சகல பகுதிகளுக்கும் சமத்துவமாகவே உயர்த்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது பஸ் சேவையை அபிவிருத்திசெய்யும் முகமாகவும் நஷ்டத்தைத் தவிர்க்கவுமே இந்தக் கட்டணம் உயர்த்தப்படுகிறது

### ரயில்

ரயில் சேவை பற்றி உண்மைகளைத் தெரிவித்தால் ஆச்சரியம் ஏற்படும் 1963ம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களின்பின் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை 1953-ம் ஆண்டு 60 லட்சம் மைல்கள் மட்டும் சேவையிலீடுபட்ட பிரயாணதூரம் இப்போது அதிகரிக்கப்பட்டுள்ளது ரயில் என்ஜின்கள் பெட்டிகள் ஆகி

(6- பக்கம் பார்க்க)

# இலவச கல்வி முறையில் மாற்றம்?

கோட்டை, சனி

கல்வித் திட்டத்தை மாற்றியமைப்பது பற்றி மந்திரி சபை ஆராய்ந்துவருகிறது இதன்படி இலவசக் கல்வி முற்றாக மாற்றியமைக்கப்படுமெனத் தெரியவருகிறது

மந்திரி சபையிலுள்ள சிரேஷ்ட மந்திரி ஒருவர் சமர்ப்பித்துள்ள கல்விச் சீர்திருத்தத் திட்டத்தில் நான்கு பல்கலைக்கழகங்களுக்குப் பதிலாக நாட்டில் ஒரே பல்கலைக்கழகத்தை வைத்திருப்பது. நாட்டின் பல பகுதிகளிலுமுள்ள பெரிய கல்லூரிகளைப் பல்கலைக்கழக இணைப்புக் கல்லூரிகளாக்கி அந்தக் கல்லூரிகளிலிருந்து மாணவர்களை பல்கலைக்கழக பரீட்சைகளுக்குத் தோற்ற அனுமதிப்பது சித்தியடைபவருக்கு இலங்கைப் பல்கலைக்கழகமே சான்றிதழ் வழங்குவதென்பன போன்ற அம்சங்கள் அடங்கியுள்ளன. இந்த அறிக்கையில் வசதிக்கட்டணம் அறவிடுவது பற்றியும், கலைப்பிரிவு மாணவர்கள் எண்ணிக்கையைக் குறைப்பது பற்றியும் ஆராய்வதுடன், புதிய

(6-ம் பக்கம் பார்க்க)

சிறந்த அலுமினியப் பாத்திரங்களுக்கு
ONE-DOLLAR
டொலர்
அலுமினியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்


### விற்பனைக்கு

சிங்கர் தையல் மெசின், ரான்சிஸ்டர் ரேடியோ, சயிக்கிள் விற்பனைக்குண்டு பார்வையிட விரும்புவோர் ஈழநாட்டிற்கு முன்பாகவுள்ள (எஸ்ரிவி அன் சன்ஸ்) உடன் தொடர்புகொள்ளவும். 3139

### தேவை

சித்திரத்தில் ஆர்வமுள்ள ஆண்கள் தேவை. யாழ் நகரசபை எல்லைக்குள் வசிப்பவரும் 18 வயதுக்கு மேற்படாதவர்களும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்ப முடிவு திகதி 5-6-71. விளம்பர இல. 3120 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 3120

### தசாகக்கிரியை

கொக்குவில் கிழக்கு கோற்பதி வைத்தீஸ்வரக் குருக்களின் மகன் சந்திரசேகரஐயர் (யாழ் மாநகர சபை மின்சாரப் பகுதி லிகிதர்) அவர்களின் தசாகம் முதலிய கிரியைகள் 2-6-71-ந் திகதி தொடக்கம் 4-6-71 வரை நடைபெறும். உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். வைத்தியநாதஐயர் 2488

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

### விற்பனைக்கு

2 ஸ்ரீ 1000 தொடர் இலக்க N S U. பிறிமா ஸ்கூட்டர் 1-50 சி சி. நல்ல நிலையிலுள்ளது. வை. சுந்தரலிங்கம், சுதுமலை வடக்கு, மானிப்பாய். 3137


## வெற்றி

உடுப்பிட்டி, சனி

கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி ஆசிரியர்களுக்கும், பழைய மாணவர் சங்கக் கோஷ்டியினருக்குமிடையே நடைபெற்ற கைப்பந்தாட்டப் போட்டியில் பழைய மாணவர் சங்கக் கோஷ்டியினர் 3-1 ஆட்டங்களால் வெற்றியீட்டினர்.

0 0 0

மட்டுவில், சனி

மட்டுவில் தெற்கு வளர்மதி விளையாட்டுக் கழகத்திற்கும் புத்தூர் வினவி விளையாட்டுக் கழகத்திற்கும் வளர்மதி விளையாட்டுமைதானத்தில் நடைபெற்ற சிநேகபூர்வமான கரபந்தாட்டப் போட்டியில் வளர்மதி விளையாட்டுக் கழகம் 2-0 என்னும் புள்ளிகளால் வெற்றிபெற்றது.

## இணைக்கப்படும்

அம்பன், சனி

பருத்தித்துறை ப.நோ.கூ. சங்கம் பிரசுர தாய்ச்சங்கத்துடன் அடுத்த மாதம் 19ம் திகதி கிளைச் சங்கங்களாவும் இணைக்கப்பட விருக்கின்றது. தற்பொழுது கிளைச் சங்கங்களை இணைப்பதற்கான இருப்பு எடுக்கும் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

## நொக்கவுட் போட்டி

மாவிட்டபுரம், சனி

தெல்லிப்பளை ஸ்ரீ ரூபயக் விளையாட்டுக் கழகம் கதிர்காமநாதன் ஞாபகார்த்தமாக நடாத்தும் மென்பந்து நொக்கவுட் கிரிக்கெட் சுற்றுப் போட்டிகள் நடைபெற்றுவருகிறது. வருடா வருடம் நடாத்தப்பட்டு வரும் இச்சுற்றுப் போட்டியில் இம்முறை 17 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றுகின்றன.


**நாகம்ஸ் சினிமா**
சுன்னாகம்
தினசரி 10-30, 4-30
HELICOPTER SPIES

**ஸ்ரீ காலிங்கன்**
இணுவில்
தினசரி
காலை 10-30, பி. ப. 1-30
சிவாஜி-பத்மினி
நடித்த
**ராஜா ராணி**

**வெஸ்லி சினிமா**
மானிப்பாய்
தினசரி
காலை 10-30, பி. ப. 2-30
ஜெய்சங்கர் — வாணிஸ்ரீ
நடித்த
**நேர் வழி**

**மனோகரா**
(யாழ்ப்பாணம்)
Daily 4-30 p m Only
"THE PLAYERS"
காலை 10-30 பி ப 2 00
காந்தாராவ்-ராஜசுலோஜனா
நடித்த
**பாட்டி சொன்ன கதை**

REGAL (Jaffna)
Daily 10-30 a m 2-00 & 4-00 p. m.
Omar ShariF
in
M. G. M'S
THE APPOINTMENT
(Color)


கிரிக்கெட்

## யுனைட்டெட் வெற்றி

யாழ்ப்பாணம் ஞாயிறு

இணுவில் யுனைட்டெட் குழுவினரும் ஜேஸஸ் குழுவினரும் மோதிக்கொண்ட ஒரு கிரிக்கெட் போட்டியில் யுனைட்டெட் குழுவினர் வெற்றிபெற்றனர்.

முதலில் துடுப்பெடுத்தாடிய யுனைட்டெட் கோஷ்டி 124 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்தியது. பின்னர் ஆடிய ஜேஸஸ் குழு எல்லாவிக்கெட்டுகளையும் இழந்து 54 ஓட்டங்களைப் பெற்றது. 2-வது இனிங்ஸில் யுனைட்டெட் 8 விக்கெட்டுகளை இழந்து 23 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்தியது. ஜேஸஸ் எல்லா விக்கெட்டுகளையும் இழந்து 52 ஓட்டங்களைப் பெற்றது.

ஜேஸஸ் கோஷ்டிக்கு ஆர் சண்முகராசவலும் யுனைட்டெட் கோஷ்டிக்கு இ யோகேந்திரமும் காப்டன்களாயிருந்தனர்.

இணுவில் எச்சாட்டி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு தி அருட்பிரகாசபிள்ளை மத்தியஸ்தம் வகித்தார்.

## ஆயுள் வேத பணியாளருக்கு பயிற்சி

சுழிபுரம், சனி

உள்ளூராட்சி மன்றங்கள் நடாத்தும் ஆயுர்வேத வைத்தியசாலைகளில் கடமையாற்றும் பணியாளர்களுக்கு மூன்று மாதங்களுக்கு பயிற்சியளிக்கும் திட்டம் ஒன்றை ஆயுர்வேத ஆணையாளர் ஆரம்பித்தார். இத்திட்டத்தின் கீழ் ஆயுர்வேத ஆணையாளரினால் தெரிவு செய்யப்பட்ட பணியாளர்கள் மூன்று மாதகாலம் முழு வேதனத்துடன் பயிற்சி பெறமுடியும்.

## செட்டிபுலம் வெற்றி

வேலணை, சனி

புளியங்கூடல் மகாமாரி சனசமூக நிலையம் நடத்திய கிளித்தட்டுச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் நிலைய மைதானத்தில் நடைபெற்றது.

வேலணை செட்டிபுலம் சனசமூகநிலையத்திற்கும் புங்குடுதீவு காந்திஜி சனசமூக நிலையத்திற்குமிடையில் நடைபெற்ற இப்போட்டியின் போது 6-5 பழங்களைப் பெற்று செட்டிபுலம் சனசமூகநிலையம் வெற்றியீட்டியது.

## இன்று தீர்ப்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு

பருத்தித்துறை கொலை வழக்கு தீர்ப்பு இன்று வழங்கப்படும். நேற்று நீதியரசர் வின்சன் தாமோதரம் உரை நிகழ்த்தினார்.

இவ்வழக்கு வடபகுதி அசைஸ் கோட்டில் நீதியரசர் வின்சன் தாமோதரம் முன்னிலையில் 15 வது தினமாக விசாரணை செய்யப்பட்டது. விசாரணை இன்று காலை வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## இருள் மயம்

திருகோணமலை சனி

திருமலை நகரவீதிகள் ஒரு வாரமாக இருள் மூழ்கியுள்ளன. திருமலை நகரசபைக்குச் சொந்தமான மின்சார யந்திரம் பழுதடைந்தமையே இதற்குக் காரணமாகும். இன்னும் இரு வாரங்களில் நிலைமை சீரடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## சீனி உற்பத்தி

திருகோணமலை, சனி

கந்தளாய் சீனித் தொழிற்சாலையில் திரும்பவும் சீனி உற்பத்தி வேலைகள் ஆரம்பிக்கப்படவிருப்பதாகத் தெரிகிறது.


### தேவை

கொழும்புக்கருகில் உள்ள பிரபல கைத்தொழில் ஸ்தாபனத்திற்குச் சிற்றுண்டிச்சாலை நடத்தத் தகுதி வாய்ந்தவர்களிடம் இருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது. விண்ணப்பிப்போர் சைவ, சிங்கள உணவு வகைகள் சுமார் (1000) ஆயிரம் தொழிலாளர்களுக்குக் கொடுக்கக்கூடிய தகுதிவாய்ந்தவராக இருக்கவேண்டும்.

முன் அனுபவம் குறித்து நற்சாட்சிப் பிரதிகளை இணைத்து விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல: 2815, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 2815

**ராணி** (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-00 பி. ப. 2-00
சிவாஜி கணேசன் கே. ஆர். விஜயா நடித்த
**ராமன் எத்தனை ராமனடி**

**வின்ஸர்** — யாழ்ப்பாணம்
காலை 10-30 பி.ப. 2-00
★ சிவாஜி கணேசன் ★ பத்மினி
நம்பியார் — சுந்தரராஜன் — தங்கவேலு
ஜெயலலிதா — மனோரமா
நடித்த
**குருதட்சணை**

**வெலிங்டன்** யாழ்ப்பாணம்
தினசரி காலை 10-30, பி. ப. 2-00 மணி
★ ஜெய்சங்கர்
★ வாணிஸ்ரீ
★ லக்ஷ்மி
நடித்த
**கன்னிப் பெண்**

**கெப்பிட்டல்**
காலை 10, பி.ப.2-00 மணி
**நீதிக்குப்பின் பாசம்**

**லிங்ஸ்லி**
காலை 10, பி.ப.2-00 மணி
**அன்பே வா**

**ஸ்ரீதர்** [illegible]
காலை 10, பி.ப.2-00 மணி
**வெண்ணிற ஆடை**

**பிளாஸா**
காலை 10, பி.ப.2-00 மணி
**குழந்தையும் தெய்வமும்**

**இன்று முதல்**
**ராஜா** யாழ்ப்பாணம்
தினசரி காலை 10-30க்கும் பி ப 2-00 மணிக்கும்
கதை வசனம்:
தமிழக முதல் அமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி
நடனம்:
சாயி சுப்புலக்ஷ்மி
ஜனாதிபதி பரிசுபெற்று 6 மொழிகளில் தயாரிக்கப்பட்ட




**மலைக்கள்ளன்**
(புதிய கொப்பி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்குப் பாக். அகதிகளுக்கு ஐ. நா. ரூ. 1½ கோடி வழங்கும்

புதுடில்லி மே 20

கிழக்குப் பாகிஸ்தான் அகதிகளுக்கென ஐ நா 20 லக்சம் டாலர் (ஒன்றரைக் கோடி ரூபா) பெறுமானமான உணவு வகைகளை அனுப்பிவைக்குமென உலக விவசாய ஸ்தாபன டைரக்டர் ஜெனரல் தெரிவித்துள்ளார். இதைவிட கிழக்கு ஜெர்மனி 20 லட்சம் ரூபாவும் மேற்கு ஜெர்மனி 11 லட்சம் ரூபாவும் உதவி அளிக்கவிருக்கின்றன.

கிழக்குப் பாகிஸ்தானில் பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர்கள் செய்துவரும் படுகொலைகளை உலக சமுதாயம் மன்னிக்கக்கூடாதென பிரிட்டிஷ் தொழிற் கட்சி எம் பி மைக்கேல் பான் ஆஸ்திரேலியாவில் தெரிவித்தார்

பிரிட்டிஷ்தொழிற்கட்சி எம் பி க்களான மைக்கேல் பானும் ஒ பி செக்காவாவும் இந்தியாவிலுள்ள கிழக்குப் பாகிஸ்தான் அகதிகள் முகாமுக்குச் சென்று பார்வையிட்டனர். பிறநாடுகளின் ஆக்கிரமிப்பிலிருந்து தம்மைப் பாதுகாப்பதாகக் கூறி வாங்கிய ஆயுதங்களை அந்நாட்டிலேயுள்ள பெரும்பான்மை மக்கள்மீது பயன்படுத்துவதை அமெரிக்காவும் பிரிட்டனும் பார்த்துக் கொண்டிருக்கக்கூடாது. பாகிஸ்தான் இராணுவத்தினர் தமது கொலைவெறியை நிறுத்தும்வரை அமெரிக்காவும் பிரிட்டனும் பாகிஸ்தானுக்கு அளிக்கும் உதவிகளை முற்றாக நிறுத்த வேண்டும் என்றார்.

## கொலைக் குற்றச்சாட்டு

அங்காரா, மே, 29

துருக்கியிலுள்ள இஸ்தான்புல்லிலிருந்து இஸ்ரேலிய இராஜதந்திரியைக் கடத்திச் சென்று கொலை செய்தது சம்பந்தமாக மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் இதில் ஒருவர் பெண்.

இவர்கள் மீது இராணுவ ஆட்சியாளர்கள் கொலைக் குற்றம் சாட்டியுள்ளனர்.

## திருமணம் தலைவலிக்கு மருந்து?

லண்டன், மே 29

திருமணமானதும் ஏற்படும் மனநிறைவில் தம்மைப் பிடித்திருந்த தீராத் தலைவலிமுற்றாக நீங்கி விட்டது என்று பிரிட்டனிலுள்ள பல வைத்தியர்கள் இன்று கூறுகிறார்கள். லண்டனிலுள்ள தேசிய வைத்தியசாலையில் பணிபுரியும் டாக்டர் ஜே எம் பினாவ் நடத்திய ஆராய்ச்சியின் பயனாகவே இவ்வுண்மை வெளிப்பட்டிருக்கிறது

திருமணமாகியதும் நேரத்திற்கு நேரம் ஒழுங்கான, முழுமையான உணவு கிடைப்பது தலைவலி நீங்குவதற்கு முக்கிய காரணங்களுள் ஒன்றாகும் என்று சொல்கிறார் டாக்டர் பினாவ்.

அளவுக்கு மீறி மெலிந்திருப்பது, வேளாவேளைக்கு உணவருந்தாமல் இருப்பது வெறும் வயிற்றில் இனிப்புப் பண்டங்களை உண்பது, நீண்ட நேரம் உறங்குவது, நாள் முழுவதும் விழித்திருப்பது, வீண்கவலைகள், மனவெழுச்சிகளுக்கு இடங்கொடுப்பது போன்ற காரணங்களாலும் தலைவலி ஏற்படுவதாக டாக்டர் பினாவ் தக்க சான்றுகளுடன் நிரூபித்திருக்கிறார்.

## பி.பி.ஸி.யில் மேலும் இரு சிறுகதைகள்

லண்டன், மே. 29

ஈழத்து எழுத்தாளரின் சிறுகதைகள் இப்பொழுது பி பி ஸியின் உலக சேவைகளில் பிரபலமடைந்து வருகின்றன. சென்ற வருடப் பிற்பகுதியில் செல்வி மொரீன் செனிவிரத்தினவும், செல்வி கலிதர லெப்பையும் எழுதிய சிறுகதைகள் சிறந்தவையெனத் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒலிபரப்பாகியது குறிப்பிடத்தக்கது.

இப்பொழுது இன்னும் இரு இலங்கை எழுத்தாளரின் சிறுகதைகள் பி பி ஸி உலக சேவையில் ஒலிபரப்பவெனத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. திருமதி மானெல் ரணதுங்க எழுதிய 'டீரீம் எவல்' என்ற கதையும் செல்வி லெப்பையின் சகோதரரான திரு யு எல் ஏ. அஸீஸ் எழுதியுள்ள 'தட்டு' என்ற சிறுகதையும்தான் இவைகளாகும்.

திருமதி ரணதுங்காவின் கதையை நேயர்கள் ஜூன் மாதம் 14 திகதி இரவு 8.45க்கு [illegible] செல்வி [illegible] திரு அசீஸின் கதை ஜூலை மாதம் ஒன்பதாம் திகதி ஒலிபரப்பாகிறது. பகுப்பாய்வாளராகத் தொழில் புரியும் திரு. அஸீஸின் படைப்புகள், இலங்கையில் ஏற்கனவே பிரசுரிக்கப்பட்டும் ஒலிபரப்பப்பட்டும் இருக்கின்றன.

இந்திய பட்ஜெட்

## சோஷலிசத்தை எட்டும் மன உறுதியைக் காட்டுகிறது

— நாஞ்சில் மனோகரன்

புதுடில்லி, மே. 29

இந்தியாவின் புதிய பட்ஜட் யோசனைகள் பற்றி, தொழிலாளர் தலைவர்களும் பொருளாதார நிபுணர்களும், வர்த்தக சபைத் தலைவர்களும் பல்வேறுபட்ட கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

1971—72க்கான புதிய பட்ஜெட்டை இந்திய நிதி அமைச்சர், திரு. வை. பி. சவான் லோகசபையில் நேற்று சமர்ப்பித்தார். சிகரெட், பெற்ரோல், மண்ணெண்ணெய், உயர்தர துணி வகைகள், வாசனைத்திரவியங்கள், தபால் கட்டணங்கள் போன்றவற்றிற்கான வரிவிகிதம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த யோசனைகள் சோஷலிசத்திட்டங்களுக்கு முன்னோடியானது என்று சிலரும், நாட்டின் பொருளாதார உற்பத்திக்கு இடையூறாய் இருப்பதோடு முதலீட்டை பயன்படுத்துவதற்கும் இடையூறாக இருப்பதாக வேறுசிலரும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இந்த பட்ஜட் யோசனைகள் மிகவும் சரியானதும் சோஷலிசத்துக்கு அடிப்படையானதுமென பிரபல கோடீஸ்வரர் திரு. ஆர். கே. பிர்லா கருத்துத் தெரிவித்துள்ளார்

லோகசபையின் தி. மு. க. குழுத் தலைவர் திரு. கே. மனோகரன் கருத்துத் தெரிவிக்கையில், சிறந்த ஓர் பட்ஜட் என்றும் சோஷலிசப் பாதையை எட்டும் அரசாங்கத்தின் மன உறுதியைக் காட்டுவதென்றும் கூறினார்.

சோவியத்—கனடாப் பிரதமர்கள்

## ஐரோப்பாவில் ஆயுதக் குறைப்புக்கு வலியுறுத்து

மாஸ்கோ, மே 29

ஐரோப்பாவில் ஆயுதப் படைகுறைப்பு செய்யப்படவேண்டுமெனப் பனை கனடாவும் சோவியத்யூனியன் வலியுறுத்தியுள்ளன.

கடந்த 3 வாரங்களாக சோவியத் யூனியனில் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்த கனடாப்பிரதமர் திரு ரூடோ தனது விஜயத்தைமுடித்துக்கொண்டதும் இரு நாட்டுத் தலைவர்களும் வெளியிட்ட கூட்டறிக்கையில் ஐரோப்பாவில் ஆயுதப்படைக் குறைப்பின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளனர்.

இருநாடுகளும் பொருளாதாரம் கைத்தொழில் துறைகளில் ஒத்துழைப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

சோவியத் பிரதமர் திரு கோசிஜினை கனடாவுக்கு விஜயம் செய்யுமாறு பிரதமர் ரூடோ விடுத்த அழைப்பை சோவியத் பிரதமர் ஏற்றுக்கொண்டுள்ளார்.

இதற்கிடையே அமெரிக்காவும் சோவியத்யூனியனும் வியன்னாவில் கூடி ஆயுதக் குறைப்புப்பற்றி பேச்சுவார்த்தை நடத்தியுள்ளன. ஹெல்சிங்கியில் அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தை நடைபெறும்.

இதேவேளையில் ஐக்கிய அரபுக் குடியரசுக்கு நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டிருந்த சோவியத் அதிபர் பொட்கார்னி தனது விஜயத்தை முடித்துக்கொண்டு நாடுதிரும்பியுள்ளார். இவரது விஜயத்தால் இரு நாடுகளுக்குமிடையே மேலும் நட்புறவு நெருக்கமடைந்துள்ளதாகச் சொல்லப்படுகிறது. அண்மையில் ஜனாதிபதி திரு அன்வார் சதாத் இடதுசாரிகளை தனது அரசாங்கத்திலிருந்து நீக்கியதனால் சோவியத் யூனியனுடனான ஐ அ குடியரசின் கொள்கையில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை என திரு பொட்கார்னி கெய்ரோவில் தெரிவித்தார்.

சோவியத் யூனியன் ஐ. அ குடியரசுக்கு 15 வருடத்திற்கு இராணுவ பொருளாதார அரசியல் ஒத்துழைப்பு அளிப்பதென்று உடன்பாட்டில் இருநாட்டுத் தலைவர்களும் கைச்சாத்திட்டுள்ளனர்.

இவ்விரு நாடுகளுக்குமிடையே ஏற்பட்டுள்ள உடன்பாடுபற்றி எவ்வித கருத்தையும் அமெரிக்க இராஜாங்க இலாகா தெரிக்கவில்லை.

### மெய்யர் கருத்து

மேற்காசியப் பிரச்சினையில் எந்த ஒரு நாடும் இஸ்ரேலை நிர்ப்பந்திக்க முடியாதென இவ்வொப்பந்தம் பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் இஸ்ரேல் பிரதமர் திருமதி கோல்டா மெய்யர் தெரிவித்தார்.

## பணம் பொருள் ஆராய்ச்சி நிலையம்

சுழிபுரம், வியாழன்

மாதகல் மத்தியகிராம முன்னேற்றச் சங்கத்தால் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் பனம் பொருள் உற்பத்தித் தொழிற்சாலையில் கருப்பநீரிலிருந்து திறமானசர்க்கரை, பனங்கட்டி வெல்லக்கட்டி முதலியன உற்பத்தி செய்யப்படுகின்றன மேலும் பனம் பழத்திலிருந்து ஜாம், சீனி சொக்கிளேற் முதலியனவும் தயாரிக்கப்படுகின்றது. சிறுகைத்தொழில் இலாகாவின் பனம்பொருள் விருத்தி உத்தியோகத்தர் திரு. ஆர். சதாசிவத்தின் மேற்பார்வையில் ஏழும் பயிற்சியின் கீழும், அநேக பெண்பிள்ளைகள் மேற்படி தயாரிப்பில் ஈடுபட்டுள்ளார்கள்.

இன்னும் தக்காளிப்பழம் அன்னாசிப்பழம், வாழைப்பழம் மாம்பழம், நாவற்பழம் முதலியவற்றில் இருந்து ஜாம் தயாரிக்கும் முறையிலும் மரவள்ளிக்கிழங்கு இராசவள்ளிக் கிழங்கு கருணைக் கிழங்கு இவற்றில் இருந்து குளிர்மையான ஜாம் செய்யும் முறையிலும் பெண்பிள்ளைகள் பயிற்சிவிக்கப்பட இருக்கிறார்கள் வலிகாமம் மேற்கு காரியாதிகாரி திரு. நடராசாவின் ஆதரவுடனும், சிறுகைத்தொழில் பனம் பொருள் விருத்தி இலாகா உத்தியோகத்தரின் உதவியுடனும் பனைஓலை நார்கு முதலியவற்றிலிருந்து தீப்பெட்டிகள் தயாரித்தல் இன்னோரன்ன ஆராச்சியில் ஈடுபட மேற்படி மாதகல் மத்திய கிராம முன்னேற்றச் சங்கத்தினர் திட்டமிட்டிருக்கிறார்கள்.

## 'சல்வீனியா' பரவுகிறது

கோட்டை, சனி

''சல்வீனியா'' பூண்டு அம்பாறை மாவட்டத்திலுள்ள நீர்நிலைகளில் தீவிரமாக பரவிக்கொண்டே வருவதினால் இவற்றில் மீன் பிடித்துவந்தவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்று கூறப்படுகிறது. அத்துடன் குடிநீரில் கூட ஆபத்துண்டாகும் அறிகுறிகள் தென்படுவதால் இப்பகுதி மக்கள் மிகவும் அச்சம் கொண்டுள்ளார்கள்.

வயல்களிலும் பரவும் இப்பூண்டுகளை அழிக்க சிரமதானம் மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது "சல்வீனியா" பூண்டு அதிகம் பரவும் இடங்களில் யானைக்கால் நோய் பரவும் என அஞ்சப்படுகிறது.

## கி. சே. தெரிவுக்கு நேர்முகப் பரீட்சை

மாவிட்டபுரம் சனி

யாழ் மாவட்டத்திலுள்ள சில பகுதிகளில் கிராம சேவையாளர்களை நியமிப்பதற்கான நேர்முகப் பரீட்சை தற்போது யாழ் அரசாங்க செயலகத்தில் நடைபெற்றுவருகிறது.

பருத்தித்துறை, உடுப்பிட்டி, பச்சிலைப்பள்ளி, கிளிநொச்சி ஆகிய காரியாதிகாரி பிரிவுகளில் தேவையான கிராமசேவையாளர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப்பரீட்சைக்கு சுமார் 200 பேர் தோற்றுகின்றனர் புள்ளியிடப்பட்டு தகுதிஅடிப்படையில்தெரிவு நடைபெறுமாம்

## இளநீரினால் சிரசில்அபிஷேகம்

நவாலி, சனி

நவாலி சித்தாமணிப் பிள்ளையார் தேர் உற்சவத்தன்று நல்லூர் சிவபூதவராயர் ஆலய பஜனைச் சபையினர் நடாத்திய பஜனையின் போது திரு. பரமானந்தம் தன்உணர்வுமறந்து நூற்றுக்கணக்கான இளநீர்களை சிரசில் அடித்து அபிஷேகம் செய்ததைக் காணக் கூடியதாகவிருந்தது.

## ஒத்திவைப்பு

வரதீவு சனி

இம்மாதம் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டிருந்த தமிழர் சுயாட்சிக் கழக வருடாந்த மகாநாடு தற்போது நாட்டிலுள்ள பதட்டநிலை காரணமாகக் காலவரையறையின்றி ஒத்திப் போடப்பட்டுள்ளது.

## பருத்தித்துறை கொலைவழக்கு

யாழ்ப்பாணம், ஞாயிறு

பருத்தித்துறை கொலை வழக்கில் நேற்று முதலாவது எதிரி சார்பில் ஆஜரான அட்வகேட் சி கமலநாதன் தொடர்ந்துதொகுப்புரை நிகழ்த்தினார்.

இவ்வழக்கு வட பகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் வின்சன்ட் தாமோதரம் முன்னிலையில் 13-வது தினமாக விசாரணை செய்யப்பட்டது. விசாரணை இன்று காலை வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோஷலிச லட்சியத்தை அடைவது எளிதல்ல; தியாகம், உழைப்பு, சுயகட்டுப்பாடு வேண்டும்

சாதாரண மக்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்ற பாரிய நோக்கம் கொண்டு அரசாங்கம் அதன் பொருட்டுப் பல சகல திட்டங்களை வகுக்கத் தீர்மானித்துள்ளது. அரசின் இந்நோக்கம் சிறந்தது. ஆனால் இந்த இலக்கை அடைய முயற்சிக்கும்போது மிகக் கவனமாக இருக்க வேண்டும். அதாவது நாட்டின் அபிவிருத்தியைப் பாதித்து வறிய மக்களின் கஷ்டங்களைப் போக்குவதாக அமையக்கூடாது.

சீர்கெட்ட பொருளாதார நிலையைச் சீர்செய்ய துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்பொழுது அபிவிருத்தி நோக்கமும் சமூகநலத் திட்டமும் இங்கு முரண்படுகின்றன. இத்தகைய தொரு பிரச்னையையே எதிர்வரும் ஆண்டுகளில் எமது அரசாங்கம் எதிர்நோக்க வேண்டியுள்ளது எனலாம். நாட்டின் தற்போதைய குழப்ப நிலையால் இது மேலும் பெரும் பிரச்னையாகியுள்ளது. பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்த சமூக நலனை எப்பொழுது தியாகம் செய்ய வேண்டும் சமூக நலத்திட்டங்களை எந்தநிலையில் தாமதமாக மேற்கொள்ளவேண்டும் என்பது குறித்தும் சமூக நலனுக்காக எப்பொழுது பொருளாதார வளர்ச்சியை மட்டுப்படுத்தவேண்டும் என்பது குறித்தும் அறிந்திருத்தல் அவசியம்

### சோஷலிச சமுதாயத்தின் குறிக்கோள்

உற்பத்தியில் ஈடுபடுவதோ அல்லது உற்பத்தியை பெருக்குவதாக மாத்திரம் ஒரு சோஷலிச சமுதாயத்தின் குறிக்கோளாக அமையாது. உற்பத்தியின் மூலம் கிடைக்கும் வருவாய் சமூக நலன் கருதிச் சமமாக விநியோகிக்கப்படவேண்டும்.

உற்பத்தியைப் பெருக்கி அந்த உற்பத்தியால் வரும் நலனை பெரும்பான்மையான மக்கள் வறுமையில் வாடும் பொழுது குறிப்பிட்ட வசதியுள்ள வகுப்பினர் மாத்திரம் அனுபவிப்பதால் அந்த உற்பத்திப் பெருக்கம் சமூக நலனுக்கு உதவிசெய்ய மாட்டாது. இதுவே முதலாளித்துவ முறையில் காணப்படும் பெரும் குறைபாடாகும். இன்றைய நிலையில் முதலாளிகள் அரசின் விதிகளை ஏற்று சோஷலிச சமுதாய முறையை அனுசரித்து அதன் கீழ் செயல்படுதல் வேண்டும். இவர்கள் சாதாரண மக்களைப் பயன்படுத்தி அதிக லாபத்தை அடையா கூடாது

### சோஷலிச நாட்டின் தேவைகள்

பெருமளவு உற்பத்தி, வேலைவாய்ப்பு, உற்பத்திப் பொருட்களுக்கு சமாயவில்லை, ஆகியவை ஒரு சோஷலிச நாட்டுக்குத் தேவைப்படும் வேளையில் அங்கு கட்டுப்பாடற்ற ஏகபோக உரிமைகளுக்கு இடமளிக்கக்கூடாது. எங்கு இவை தலைதூக்கின்றனவோ அவை கட்டுப்படுத்தப்படவேண்டும். பொருளாதார அபிவிருத்தியின் நோக்கம் பெருமளவில் உற்பத்தி செய்வதுமட்டுமல்ல குறைந்த செலவில் உற்பத்தி செய்வதுமாகும். குறைந்த செலவில் பொருட்களை உற்பத்தி செய்வதென்பது பெரிய ஸ்தாபனங்களால் மட்டும் இயலக்கூடிய காரியமாகும். இத்தகைய பெரிய ஸ்தாபனங்களுக்கு ஏக போக உரிமை அளிக்கப்பட்டால் அவை அதிக லாபம் பெறத் தாம் நினைத்தபடி உற்பத்திப் பொருட்களின் விலையை அதிகரித்துவிடும். இந்நிலையில் விலையை கட்டுப்படுத்தி அப்பொருட்களுக்குக் கட்டுப்பாட்டு விலையொன்றை நிர்ணயிக்க அரசாங்கத்துக்கு உரிமையுண்டு ஆனால் இக்கட்டுப்பாட்டு விலை உற்பத்தியாளரின் ஊக்கத்தைக்குறைக்கத்தக்க அளவு குறைவாகவிருக்கக் கூடாது

### உற்பத்திப்பெருக்கம்

வறுமையை விரட்டிச் சமுதாயத்துக்குக் கூடிய நலனை அளிக்கவேண்டுமானால் உடனடியாக உற்பத்தியைப் பெருக்கவேண்டும். உற்பத்தியைப்பெருக்க அரசாங்கம் உற்பத்தியாளர்களுக்கு ஊக்கமளிக்கவேண்டும். அப்பொழுதுதான் குறுகிய காலப் பகுதியில் வருவாய் அதிகரிக்கும். சமுதாய நலன் கருதி நாம் விநியோகத்தில் மாத்திரம் கூடிய கவனம் செலுத்துவோமானால் நாம் வறுமையையே விநியோகித்தவர்களாவோம்

உற்பத்தி வேகம் அதிகரித்தால் வேலைவாய்ப்புக் கிடைக்கும். வருவாய் பெருகும் சமூக நலத்திட்டங்களுக்குக் கூடியளவில் அரசாங்கமும் செலவுசெய்ய முடியும். ஆனால் நாம் இவ்வாறு எல்லாம் திட்டமிட்டுச் செயலாற்ற முயலும் போது 'நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைத்தது' போல் மக்கள் தொகை வறுமை நிலையில் அதிகரிக்கிறது. செல்வச் செழிப்பு ஏற்படும்போது மக்கள் தொகை குறைகிறது

### ரஷ்யாவில்

பொருளாதார வளர்ச்சிக்கும்சமூக நலனுக்குமிடையே இயற்கையான முரண்பாடு எதுவுமில்லை சமூக நலனில் அதிக ஈடுபாடுகொள்ள பொருளாதார அபிவிருத்தி அதிகரிக்கப்படவேண்டும் லாபம் கருதாமல் சமுதாய நலனுக்கு முதலீடுகளைச் செய்து உற்பத்தி வேலைகள் யாவற்றையும் பொறுப்பேற்று நடாத்தும் கம்யூனிஸ நாடான ரஷ்யாவிலுங்கூட உற்பத்திக்கு ஊக்கமும் தூண்டுதலும் அளிப்பது அத்தியாவசியமானதாகக் கருதப்படுகிறது. பொருளாதார வளர்ச்சியின்பொருட்டு சமூகநலனை ஓரளவுக்குத் தியாகம் செய்யவேண்டும்.

### சோஷலிஸத்தை அடைவது சுலபமல்ல

தற்போது எமது அரசாங்கம் நாட்டின் உற்பத்தியை பெருமளவைத். தம்வசம் வைத்திருக்கும் தனியார் துறைக்கு ஊக்கமளிக்கத் தக்கவகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுவது எமக்கு மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் அளிக்கத் தக்கதாகவுள்ளது. கைத்தொழில் அமைச்சர் இலங்கை தேசிய கைத்தொழில் வர்த்தக ஸ்தாபனத்தினர் மத்தியில் உரையாற்றுகையில் தனியார் துறைக்கு அரசாங்கம் அளிக்கும் உறுதிமொழி, பற்றியும், வேலையற்ற இளைஞர்களால் இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள இக்கட்டான நிலை குறித்தும், எமது ஏற்றுமதியை அதிகரிக்கவேண்டிய அவசியம் குறித்தும் தெளிவாக விளக்கிக் கூறியுள்ளார். இதிலிருந்து சோஷலிஸமென்பது மக்களைக் கவர்ந்திழுக்கும் போலிக்குரலல்ல. சோஷலிசத்தை அடைவது மிகவும் கஷ்டமானதொரு லட்சியமாகும் என்பது தெளிவாகிறது விவசாயம், வர்த்தகம், கைத்தொழில் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட ஆக்கவேலைத் திட்டங்களை வகுத்து தேசியநலன்கருதி அவற்றைச் சுயகட்டுப்பாட்டுடனும் பொறுப்புணர்ச்சியுடனும் அத்திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலமே சோஷலிசமென்ற அடைதற்கரிய லட்சியத்தை நாம் அடையலாம். பெரிய 'கேக்கை' நாம் தயாரித்தால்தான் பகிர்ந்துண்ணும்போது அதில் பெரிய துண்டொன்றைப் பெற்றுச் சுவைக்கலாம். அதுபோல உற்பத்தித்திறன் தொழில்நுட்பம், போதியளவு முதலீடு, சுயநலமற்ற சேவை, தியாகம் ஆகியவற்றால் நாட்டின் உற்பத்தியைப் பெருமளவில் அதிகரித்தால்தான் நாம் ஒவ்வொருவரும் அடையும் நன்மையும் பெரிதாகவும் நன்மைபயப்பதாகவும் அமையும்.

— அலுவலக எழுத்தாளர்

### 150 ரூபா அபராதம்

முல்லைத்தீவு, சனி

நெடுங்கேணியைச் சேர்ந்த ஐயாத்துரை இராஜநாயகமும், நாகலிங்கம் இராசரெட்ணம் அல்லது ராசன் ஆகிய இருவரும் தனித்தனி 20போத்தல் சாராயத்தை இ. போ. ச. பஸ் மூலம் கொண்டுசெல்ல எத்தனித்த போது முல்லைத்தீவு கிராம சேவையாளர் திரு. பொ. திருநாவுக்கரசுவினால் கைது செய்யப்பட்டு முல்லைத்தீவுப் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டனர். இவர்கள் இருவர் மீதும் முல்லைத்தீவுப் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு முல்லைத்தீவு நீதிபதி திரு விமல் விக்கிரமசூரியா முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது எதிரிகள் தாங்கள் தனித்தனியே இருபதுபோத்தல் சாராயத்தை வைத்திருந்த தமது குற்றத்தை ஒப்புக்கொண்டனர். நீதிபதி எதிரிகளுக்குத் தலா 150 ரூபா அபராதம் விதித்ததுடன் நாற்பது போத்தல் சாராயத்தையும் பறிமுதல் செய்யும்படியும் தீர்ப்பளித்தார்.

### மஹோற்சவம்

வேலணை ஞாயிறு

நாரந்தனை சரவணை ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோவில் வருடாந்த உற்சவம் இன்று 30-ம் திகதி கொடியேற்றத் திருவிழாவுடன் ஆரம்பித்து அடுத்த மாதம் 8-ம் திகதி நடைபெறும் தேர்த்திருவிழாவுடன் நிறைவுறும்.

தினமும் பகல் திருவிழா காலை 8 மணி தொடக்கம் 11-30 மணி வரையும் பிற்பகல் 8 மணி தொடக்கம் 6 மணி வரையும் நடைபெறும்.

......

### உற்சவம்

வல்வெட்டித்துறை, ஞாயிறு

வல்வெட்டி வேவில் வீரகத்திப் பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவம் ஆரம்பமாகியுள்ளது. வருகிற மாதம் 4-ம் திகதி வேட்டைத் தோற்சவமும் 7- திகதி ரதோற்சவமும், 8-ம் திகதி தீர்த்தோற்சவமும் நிகழும்.


## காய்ச்சல், சளிசுரத்தைச் சகித்துக் கொண்டு வீணாகச் சங்கடப்பட வேண்டாம்




## டிஸ்பிரின் உட்கொண்டு அதிதுரித நிவாரணம் பெறுங்கள்

உங்களுக்குக் காய்ச்சல், சளிசுரம் வந்தால்
- ★ ஓய்வெடுங்கள்
- ★ உடம்பைச் சூடாக வைத்திருங்கள்
- ★ நீர் ஆகாரம் சாப்பிடுங்கள்
- ★ 4 மணித்தியாலத்துக்கு ஒரு தடவை 2 டிஸ்பிரின் மாத்திரை உட்கொள்ளுங்கள்

காய்ச்சல், சளிசுரம் வரும் போது காய்ச்சலைக் குறைக்கும் மருந்துகளைக் கிரமமாகப் பாவிக்க வேண்டியிருக்கும். கிரமமாகப் பாவித்தால், சில மருந்துகள் பெரும் பாதக விளைவுகளைக் கொடுக்கக் கூடும். டிஸ்பிரின் முற்றாகக் கரைவதாகையால், கரையாத மற்ற மருந்துகள் போல, உடம்புக்குப் பாதகமான துகள்களை வயிற்றில் விட்டு வைப்பதில்லை. சில புதிய மருந்துகளிற் போல, பாதக விளைவுகளை ஏற்படுத்தும் சேர் பொருள்களும் டிஸ்பிரினிற் கிடையாது. எனவே எவ்வித பயமுமின்றி டிஸ்பிரின் உட்கொள்ளலாம்.

**டிஸ்பிரின் அதிதுரித நிவாரணம் தரும்**

டிஸ்பிரின் மிக விரைவாகவும் முற்றாகவும் கரைந்து இரத்தோட்டத்திற் சீக்கிரம் செறிகிறது. இரத்தோட்டத்தில் விரைவாகச் செறிவதால் மிக வேகமாக உடம்பிற் செயலாற்றி உங்களுக்கு அதிதுரித நிவாரணம் தருகிறது. அதனால்தான் உலகமெங்குமுள்ள வைத்திய நிபுணர்கள் அதிதுரிதமான அதிவன்மையான நிவாரணத்துக்கு டிஸ்பிரினைச் சிபாரிசு செய்கிறார்கள்.

தலைவலி, நோவு, சளிசுரம், காய்ச்சல், தடிமல், மாதவிடாய் வலி, வாத நோவுகளிலிருந்து அதிதுரிதமான அதிபாதுகாப்பான நிவாரணம் பெற டிஸ்பிரின் பாவியுங்கள்.

2 மாத்திரைகளை நீரிற் கரையவிட்டு அல்லது முழுமையாக ஏதாவது பானத்துடன் உட்கொள்ளுங்கள்.

குழந்தைகளுக்குப் பெட்டியிலுள்ள அளவுப் பிரமாணங்களைப் பாருங்கள்.

றெக்கிட் அன்ட் கோல்மன் உற்பத்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவுச் செய்திகள்

## இயந்திரம் தாமதம்

வேலணை, சனி

நெடுந்தீவு அரசினர் ஆஸ்பத்திரிக்கு மின்சார வசதி அளிப்பதற்கான வேலைகள் யாவும் பூர்த்தியாக்கப்பட்டு பல மாதங்களாகியபோதிலும் இயந்திரம் வந்து சேராததால் வெளிச்சவசதிகிடைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

## பிரயாணக் கஷ்டம்

குறிகாட்டுவானுக்கும் நெடுந்தீவுக்குமிடையே இயங்கி வந்த 'எலாரு' என்ற படகு தனது சேவையைத் தொடர்ந்து நடத்த முடியாது பழுதடைந்ததால் மக்கள் தனியார் படகுகளின் உதவியுடன் பிரயாணத்தை மேற்கொள்ளுகின்றனர்.

## நிதி உதவி

நெடுந்தீவு மகாவித்தியாலயத்தின் அதிபரும் ஆசிரியர்களும் தமது ஒருநாள் சம்பளத்தை பயங்கரவாதிகளின் நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டோர் நிவாரணநிதிக்கு வழங்க முன்வந்துள்ளனர்.

இத்தொகையை ஜூன் மாதச் சம்பளத்தில் கழித்துக்கொள்ளுமாறு வடமாநில கல்வி அதிபருக்கு அவர்கள் அறிவித்துள்ளனர்.

0 0

நெடுந்தீவு மக்களின் சுகாதாரவசதிக்காக ஒவ்வொரு வீடுகளுக்கும் சுகாதாரப்பகுதியினர் சென்று டி. டி. ரி. தெளித்துவருகின்றனர்.

## மின்சாரம்

ஊர்காவற்றுறையிலிருந்து வேலணைக்கு மின்சாரம் வழங்குவதற்கான வேலைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

## மின்சாரம் வழங்குக

நெடுந்தீவு ஆஸ்பத்திரிக்கு மின்சாரம் கொடுப்பதை விரைவுபடுத்துமாறும் புங்குடுதீவுக்கு மின்சார விஸ்தரிப்புத்திட்ட வேலையை விரைவில் தொடங்குமாறும் ஊர்காவற்றுறை ஆட்சி மன்ற உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினம் இலங்கை மின்சாரசபை பொதுமுகாமையாளரிடம் வேண்டுள்ளார்.

நாரந்தனை கிராமசபைக்கு மின்சாரத்திட்டத்திற்கு வேண்டிய கடனை விரைவில் கொடுக்குமாறும் உள்ளூராட்சி ஆணையாளரிடம் அவர் கோரியுள்ளார்.

......

## 10 உயர்தர அதிபர்கள் தெரிவு

கோட்டை, சனி

150 "சுப்பர்கிரேட்" பாடசாலை அதிபர்களுள் புதிய உயர்தர அதிபர்களாக பத்துப் பேர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்களுடைய சம்பள விகிதம் பிராந்திய அதிகாரிகளின் சம்பளத்துக்கு சமமாக இருக்கும். தேர்ந்தெடுக்கப்பட்ட அதிபர்களின் விபரம் வருமாறு:

ரோயல்கல்லூரி அதிபர் திரு. டி. ஜி. வெலிகல. நாலந்தா கல்லூரி அதிபர் திரு. எஸ். அற்றுகொறல, ஆனந்த பாலிக்கா மகாவித்தியாலய அதிபர் திருமதி ரி. காரியவசம், கம்பளை சாகிராக் கல்லூரி அதிபர் திரு. எம். யூ. அகமத், கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி அதிபர் ச. கே. சண்முகநாதன், காலி மஹிந்தாக் கல்லூரி அதிபர் திரு. ஜே. எச். குணசேகரா, விசாகா வித்தியாலய அதிபர் திருமதி எஸ். எச். ஜயசிங்க, யாழ் மத்தியகல்லூரி அதிபர் திரு. ச. சபாலிங்கம், கண்டி தர்மராஜ கல்லூரி அதிபர் திரு. வீ. ஜி. பி. சமரஜீவ, அம்பலங்கொடை தர்மசோக கல்லூரி அதிபர் திரு. எம். டி. விமலசூரியா.

## கைத்தொழிற் பேட்டை

கோட்டை, சனி

நாட்டின் பல பாகங்களிலும் கைத்தொழில்பேட்டை நிறுவப்பட இருக்கிறது. கைத்தொழில் மூலப்பொருள் கிடைக்கப்பெறும் இடங்களில் முக்கியத்துவம் அளித்து அங்கு இந்த கைத்தொழில் பேட்டை நிறுவப்படும் என்று கைத்தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

......

## தும்புத் தொழிற்சாலை வேண்டும்

மாவிட்டபுரம், சனி

மாவிட்டபுரத்தில் தும்புத் தொழிற்சாலை ஒன்றை நிறுவித் தரும்படி குடிசைக் கைத்தொழில் இலாகாவைக் கோரும் தீர்மானம் ஒன்றை பழை வீமன்காமம் கிராமமுன்னேற்றச் சங்கம் நிறைவேற்றியுள்ளது.

மேற்படி சங்கத்தின் கூட்டம் திரு. மு. சின்னையா தலைமையில் நடைபெற்ற போது கீழ்க்கண்ட தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன

மாவிட்டபுரத்தில் அமைந்துள்ள சங்கத்தின் பல நோக்கு மண்டபத்தில் இப்பகுதி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் பொருட்டு தும்புத் தொழிற்சாலை அமைக்கவேண்டும். இலாகா இடமாக பழங்களைப் பதனிட்டு புதிய பொருள்களை தயாரிக்கக்கூடிய பழம்பதனிடும் தொழிற்சாலை அமைக்க வேண்டும்.

போக்குவரத்துக்கு இடைஞ்சலாக உள்ள கந்தன் சீமா, நெசவு நிலைய வீதி ஆகியவற்றை சிரமதானம் மூலம் செப்பனிடுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. வேறு பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

## "பாராட்ட வேண்டும்"

உடுப்பிட்டி, சனி

'நாட்டில் சமாதானமும் ஐக்கியமும் நிரந்தரமாக ஏற்படுவதின் மூலமே உண்மையான ஜனநாயகம் ஏற்பட முடியும். இன்றைய சூழ்நிலையில் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோவின் நடவடிக்கைகள் ஒரு சாதனையாக விளங்குகிறது. எது ஜனநாயகம் என்பதை நிலைநாட்டிய பிரதமரை நாட்டு மக்கள் மறக்கமுடியாது. பயங்கரவாதிகளை முற்றாக ஒழித்துக் கட்டுவதில் பொதுமக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும்'

மேற்கண்டவாறு உடுப்பிட்டித் தொகுதிக் கம்யூனிஸ்ட்கட்சி அமைப்பாளர் திரு. பா. தவமோகம் தலைமையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

## அரசாங்க அதிபருக்கு நன்றி

குருநகர், சனி

உணவுக் கட்டுப்பாட்டிலாகாவில் கூடிய காலம் சேவையாற்றிவரும் தகுதிவாய்ந்த ஊழியர்களுக்கு தரமான வேலைகளைக் கொடுக்குமாறு அரசாங்க பொது சேவைத் தொழிலாளர் சங்க யாழ். கிளை யாழ். அரசாங்க அதிபரிடம் கேட்டுக்கொண்டதற்கமைய நடைபெற்ற சில பதவிமாற்றங்களின் ஆனையிறவு பரியரில் சேவைக்கு அனுப்பியிருந்த இரு ஊழியர்களுக்கு யாழ்ப்பாணம் துறைமுக பொருட்கள் தேக்கும் பகுதிக்கு பாதுகாவலர்களாக கடமையாற்றம் கிடைத்துள்ளது. அரசாங்க அதிபரின் இந்த நடவடிக்கைக்கு சங்கம் நன்றி தெரிவித்துள்ளது.

# இன்றைய பலன்

வைகாசி மாதம் 16-ந் திகதி
30-5-71

மேஷம்- துணிச்சலுடன் காரியங்களைச் சாதிப்பீர்கள் விவசாயிகள் வாழ்க்கையில் முன்னேற்றம் உண்டு. மாணவர்களுக்குக் கல்வியில் ஆர்வம் பிறக்கும்.

இடபம்- குடும்பத்தில் சிறியபூசல்கள் தலைதூக்கும். விஷமிகளின் புலைந்துரைகள் தலைதூக்கும். தொழில் புரியும் இடத்தில் நல்லமாற்றத்துக்கு இடமுண்டு.

மிதுனம்- பழைய நினைவுகள் உங்களைக் கவலையில் ஆழ்த்தும். பொருள் விரயத்திற்கும் இடமேற்படும். நிதானம் வேண்டும்.

கடகம்- சிக்கலான பிரச்சினைகளை இன்று தள்ளிவைப்பது விரும்பத்தக்கது பெரியவர்களுடன் பகைத்துக் கொள்ளவேண்டாம். நிதானம் வேண்டாம்.

சிம்மம்- நல்லகாரியங்களை ஆரம்பிப்பதற்கு இன்று பொன்னான நாள். தொழில் புரியும் இடத்தில் பாராட்டுதல்கள் கிடைக்கும்.

கன்னி- பணவிவகாரத்தில் அபிப்பிராயபேதங்கள் உருவாகும். மிகவும் சுமாரான தினம். அகோரகோலம் தலைகாட்டும் அடக்கமே நன்று.

துலாம்- வாகன விருத்தியுடன் இல்லத்தில் திருப்தி காணும். மோகன வாழ்வு கிட்டும் முன்னேற வழியும் தோன்றும்.

விருச்சிகம்- கனிவான பேச்சு, சாந்தம் போல் பார்வை கன்னியர் உறவு. காதலுக்கு இடமுண்டு. கவர்ச்சிகரமான நாள்.

தனுசு- பகைவர் பதுங்குவர். பாதையில் தடைகளுண்டு. நம்பிக்கை மோசடி மூலம் பணமும் பறிபோகலாம். முன்னெச்சரிக்கை நன்று.

மகரம்- எண்ணிய கருமம் கண்ணியமாய் முடியும் இன்று. கலைத்துறைவழியால் பொருள் வரவும் உண்டு. பெரியோர்கள் மதிப்பும் கிடைக்கும்.

கும்பம்- பொருள் கைவிட்டுப்போகும். மற்றவர்களிடத்தில் பொல்லாங்குகேட்க நேரிடலாம். சிநேகித வழியால்தொல்லைகள்தோன்றக்கூடும்.

மீனம்- குறிக்கோளில் இன்று வெற்றிஉண்டு. கலைஞர்கள் போற்றப்படுவார்கள் பரந்தமனப்பான்மையுடன் செயலாற்ற விரும்புவீர்கள்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## புதிய உபதபால் கந்தோர்

குருநகர், சனி

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் புதிய உபதபால் அலுவலகமொன்றை நிறுவுவதற்கு தபாலமைச்சர் உத்தரவு வழங்கியுள்ளார். என்று தெரிகிறது. இந்த உபதபால் அலுவலகத்தைதிறப்பதற்கான ஏற்பாடுகளை வடமாகாணத்தபால் அத்தியட்சகர் பி. நடராசா கவனித்து வருகின்றார். இத்தபாலகத்துக்கான உபதபால் அதிபரை தெரிவதற்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

......

## சுற்றுப் போட்டி

உடுப்பிட்டி, சனி

வதிரி பொமேர்ஸ் விளையாட்டுக் கழகம் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்றை ஆரம்பித்துள்ளது. இச்சுற்றுப்போட்டியில் வடமராட்சியைச் சேர்ந்த பல விளையாட்டுக் கழகங்கள் பங்குகொள்ளுகின்றன.

# "டியூஷன்" நடத்துவது மைசூரிலும் தடை

சென்னை, மே 29

பாடசாலை ஆசிரியர்கள் பிரத்தியேகமாக மாணவர்களுக்கு வகுப்புகளை நடத்துவது கண்டுபிடிக்கப்பட்டால் அவர்கள் சேவையிலிருந்து நீக்கப்படுவார்களென மைசூர் மாநிலக் கல்வி இலாகா அறிவித்துள்ளது. மைசூர் மாநிலத்திலுள்ள கல்வி நிலைமை குறித்து ஆராய்வதற்காகக் கவர்னரால் நியமிக்கப்பட்ட நிபுணர்களின் குழு இந்தச் சிபாரிசைச் செய்துள்ளது. பிரத்தியேக வகுப்புக்களை நடத்தும் ஆசிரியர்கள் பாடசாலை வேலைகளைப் புறக்கணிக்கிறார்களென்றும் இது கல்வித் திட்டத்தைப் படுமோசமாகப் பாதிப்பதென்றும் அக்குழு அபிப்பிராயம் தெரிவித்துள்ளது.

## 'முஸ்லிம் மக்கள் முன்வர வேண்டும்'

தாவடி, சனி

'யாழ்நகரில் மிகவும் நெருக்கடியான குடிசனமுள்ளபகுதி முஸ்லிம் வட்டாரம். இங்கு தான் க்ஷயரோகப் பிரச்னையும் கூடுதலாகவுள்ளது. இதைத்தடுத்து இக்கொடிய நோய்க்குத் தீர்வுகாண ஒவ்வொரு முஸ்லிம் மக்களும் முன்வருதல் வேண்டும்' என்று இலங்கை க்ஷயரோக நிவாரண சங்கத்தினரால் நடாத்தப்பட்ட க்ஷயரோக ஒழிப்புக் கூட்டத்தில் கலந்துரையாற்றிய மாநகரசபை உறுப்பினர் திரு எம். ஏ. சி. எல். எஸ். காதர் கூறினர்.

அகில இலங்கை முஸ்லிம் முன்னேற்ற மன்றத்தின் ஆதரவில் யாழ் மீரானியா கல்லூரி மண்டபத்தில் திரு எம். எம். சாகீட் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

......

## உழவாரத் தொண்டு

தாவடி, சனி

'பெறுதற்கு அரிய பிறவியாகிய மனிதப் பிறவியை எடுத்த நாம் ஒவ்வொருவரும் தொண்டு செய்வதில் பின்நிற்கக்கூடாது. உடல், பொருள் ஆவி மூன்றையும் பயன் படுத்தி ஏனையோரும் பயனடையும் நாம் முன்னின்றுழைத்தல் வேண்டும்' என்று தாவடி சைவ இளைஞர் மன்றத்தலைவர் திரு. ஆ. கமலநாதன் "உழவாரத் திருத்தொண்டை" ஆரம்பித்து வைத்துப்பேசுகையில் குறிப்பிட்டார்.

தாவடி அம்பலவாணவேத விநாயகராலய வீதியை சிரமதானத் தொண்டின் மூலம் துப்புரவாக்கும் பணியில் சைவ இளைஞர் மன்றத்தைச் சேர்ந்தவர்களும் மற்றும் பலரும் கலந்துகொண்டனர்.

## உத்தியோகப்பற்றற்ற மேற்பார்வையாளர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

துன்னாலை தெற்கைச் சேர்ந்த திரு. ஆ. குலேந்திரம் உடுப்பிட்டித் தொகுதிக்கு உத்தியோகப்பற்றற்ற மேற்பார்வையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். கூ. மொ. விற்பனை நிலையத்தாலும் லங்காசதுசல லிமிட்டெட்டினாலும், கூட்டுறவுசமாசங்களினாலும் சங்கங்களினாலும் நடாத்தப்படும் டிப்போக்களுக்கும், கடைகளுக்கும், சந்தைப்படுத்தற் திணைக்களத்தினாலும் நடாத்தப்படும் கடைகளுக்கும், சேகரிக்கும் நிலையங்களுக்கும் உத்தியோகப்பற்றற்ற மேற்பார்வையாளராகக் கடமையாற்ற வர்த்தக அமைச்சரினால் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் ஒரு சமாதான நீதவானுமாவார். துன்னாலைதெற்கு தயாநிதி ச. ச. நி. சமூகசேவாசங்கம், சமாதானசபைகளின் தலைவராகவும், இ. மு. ச. உ. தலைவராகவும் இவர் இருக்கின்றார்.

## நயினாதீவு குடிநீர் திட்டம்

காரதீவு, சனி

நயினாதீவு குடிநீர் அபிவிருத்தித் திட்டவேலைகளை சிரமதானமூலம் செய்வதுபற்றிய ஆலோசனைக்கூட்டம் ஒன்று அண்மையில் கிராமசபை அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சிரமதானக்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது. குழுத் தலைவராக திரு. கா. க. சிவசிதம்பரமும், செயலாளராக உதவி வைத்திய அதிகாரி சு. கதிரேசுவும் பொருளாளராக மகாவித்தியாலய அதிபர் திரு நா. விசுவலிங்கமும் காரியாளராக கிராமசபைத் தலைவர் திரு. சி. க. தம்பையாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

கிராமசபை உறுப்பினர்கள், கிராமசேவகர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் குழுவின் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். இக்கூட்டத்தில்குடிநீர்திட்ட பரிபாலன பொறியியலாளரும் பிரசன்னமாய் இருந்தார். இவர்கள் தண்ணீர் விநியோகிப்பதற்கு ஏற்ற இடமாக மூன்றாம் வட்டாரத்திலுள்ளகுளம் ஒன்றைத் தெரிவு செய்தனர். அதைத் துப்பரவாக்கி ஆழமாக்கி நன்னீர் பெறலாமென்ற கருத்து அங்கு வலியுறுத்தப்பட்டது.

## ஸ்ரீசாயிநிவாச மண்டபம்

திருகோணமலை, சனி

திருமலையின் பிரதான வீதியில் புதிதாக ஸ்ரீசாயி நிவாச மண்டபம் திறக்கப்பட்டுள்ளது. இலங்கை சிவாசிரோன்மணி பிரம்மஸ்ரீ சிவசுப்பிரமணியக்குருக்கள் மண்டபத்தை யாகம் நடாத்தி திறந்துவைத்தார். அன்று மாலை சாயிபாபா சமித்தியின் இரண்டாவது ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. விழாவுக்குதிருமலைமுன்னாள் நகரபிதா டாக்டர் சி. சிவானந்தம் தலைமை தாங்கினர்.

......

## திருமலை ந. சபை நிதி உதவி

திருக்கோணமலை, சனி

பயங்கரவாதிகளினால் பாதிக்கப்பட்ட பாதுகாப்புப் படையின் பாதுகாப்பு நிதிக்கென திருமலை நகரசபை ரூபா ஐந்நூறை வழங்கியுள்ளது. இத்தொகை நகரசபையின் நன்கொடை நிதித் தொகையில் இருந்து ஒதுக்கப்பட்டுள்ளது திருமலை நகராட்சி மன்றத் தலைவர் திரு. வே. தம்பிஐயா இதனைத் தெரிவித்தார்

## ரூ13,000செலவில் கொடிக்கம்பம்

சுழிபுரம், சனி

சுழிபுரம் பறளாய் சிவசுப்பிரமணியசுவாமி கோவிலுக்கு 13,000 ரூபா பெறுமதிவான கொடிக்கம்பம் ஒன்றை சுழிபுரம் மேற்கு வெடியரசன் மரபினர் உபயமாக வழங்கியுள்ளனர்.

......

## சிரமதானம்

அம்பன், சனி

அம்பன் காந்திசேவாக் கிராம முன்னேற்றச் சங்கத்தைச் சேர்ந்த 40 இளைஞர்கள் அம்பன் குடியேற்றத் திட்ட வீதியை சிரமதான மூலம் அமைத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "சான்றோர்களை மதிப்பதால் சமாதானம் ஏற்படும்"

யாழ்ப்பாணம், ஞாயிறு

அடியார்களின் வரலாற்றினை அறிந்து யாவரும் கடைத்தேறும் வண்ணம் சேக்கிழார் பெருமான் அருளிய திருத்தொண்டர் புராணத்தினை வசனத்தில் ஆக்கித்தந்த பெரியார் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பிறந்த புண்ணிய பூமியாகிய யாழ்ப்பாணத்தில் கடந்த ஆண்டு நடைபெற்ற சேக்கிழார் குருபூசையிலும் இவ்வாண்டு நடக்கும் சேக்கிழார் குருபூசையில் கலந்து கொள்ளக்கிடைத்த இறைவனின் திருவருளை நினைத்துப் பெருமகிழ்வடைகின்றேன்.

இவ்வாறு முன்னாள் சென்னை மாநில அரசின் காரியதரிசியாக விளங்கிய பேரறிஞர் நல் முருகேச முதலியார் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தில் அகில இலங்கை சேக்கிழார் மன்றத்தினரால் நடாத்தப்பெற்ற சேக்கிழார் குருபூசையை தொடக்கிவைத்துப் பேசுகையில் கூறினார்.

மாவிட்டபுரம் ஆலயப் பிரவேச வழக்கில் நிபுணத்துவ சாட்சியம் அளிப்பதற்காக தமிழ் நாட்டிலிருந்து இங்கு வந்திருந்த திரு நல் முருகேசமுதலியார் நேற்று யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற இவ் விழாவில் கலந்துகொள்ள சந்தர்ப்பம் கிடைத்தது. திரு முருகேச முதலியார் பேசுகையில் கூறியதாவது:

சென்னைக் காபாலீசுரர் கோவிலுக்கு வருகின்றபடிப் பறிவில்லா மக்கள் அடியார் அறுபத்துமூவர்களதும் விக்கிரகங்களை மிகுந்த பயபக்தியோடு வழிபடுவார்கள். இவர்கள் யார் என்று கேட்டால் ஆண்டவனின் பிள்ளைகள் என்று பதிலிறுப்பார்கள். அது உண்மைதான் என்றாலும் இவர்கள் அடியார்களின் வரலாறுகளை அறிந்தது மிகக் குறைவு. ஆறுமுகநாவலர் கண்ணப்பநாயனார் திருநாளைப் போவார் நாயனார் ஆகியோர்களின் வரலாற்றினை ஓரளவு அறிந்திருப்பார்கள். இவர்கள் யாவரும் அடியார்களின் வரலாற்றினை அறிவதற்கு உதவி உதவியாக இருந்தவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களே. அவர் பிறந்த புண்ணியபூமியாகிய யாழ்ப்பாணத்திலே இரண்டாவது தடவையாக சேக்கிழார் விழாவில் கலந்து கொள்வதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

பெரிய புராணத்திலே கூறப்படுகின்ற அடியார்களின் வரலாற்றினை மாத்திரம் மேலோட்டமாகத் தெரிந்து கொள்வது போதாது. அவ் வரலாறுகளினூடாகச் சமய தத்துவங்களையும் சைவ சித்தாந்த நுண்பொருள்களையும் ஆழமாகக் கற்றுணர வேண்டுவதும் சைவ மக்களின் கடனாகும். நாள்தோறும் தேவார படனம் செய்வது போலத் திருத்தொண்டர் புராணத்தையும் படனஞ் செய்ய வேண்டுவது அவசியமாகும். அது பிரும்மசூத்திரத்திற்கு நிகரானது சாத்திர நூற்பொருள்களுக்கெல்லாம் வழிகாட்டியாய் அமைந்துள்ளது. பெரிய புராணத்தை எழுத்தெண்ணிப் படிப்பவர்கள் சைவசமய உண்மைகளையெல்லாம் நன்கு உணர்ந்தவர்களாவர்.

பெரிய புராணத்திலே இறைவனுடன் உடனுறல் என்ற உன்னத அத்வைதக் கருத்து மிக நுட்பமாகப் புலப்படுத்திருக்கிறது இறைவனுடன் அடியார் உடனுறைவது அடியாருடன் அடியார் உடனுறைவதும் மாபெரும் நிகழ்ச்சிகளாகும் இந்நிகழ்ச்சியின் ஒரு பிரதிபலிப்பும் போல சென்ற ஆண்டு அழைப்பின்பேரில் வந்து கலந்துகொண்டயான் எதிர்பாராத முறையில் இன்று உங்கள் குரலிசையிலே சேக்கிழாருடன் உடனுறையினேன் இவ் வாய்ப்பை நல்கிய உங்களுக்கு என் நன்றி

திரு ஞானப்பிரகாசம் பேசுகையில் கூறியதாவது

வேதாகமங்களிலும் சரி பெரியபுராணத்திலும் சரி ஒரு உண்மையே மிளிருகின்றது பரம்பரை வாழ்வு என்பதே அந்த உண்மையாகும் அதனைச் சென்ற தலைமுறையில் வாழ்ந்த எம் நாட்டு மக்கள் நன்கு அனுஷ்டித்து வந்தனர் அது இன்று எம் மத்தியிலிருந்து நழுவி விட்டது அதனை மீண்டும் நாட்டில் கொண்டுவரவேண்டிய கடமை முக்கியமாக ஆசிரியர்களையே சாரும்

அர்ப்பண வாழ்வில் உயர்ந்தாரை உண்மைச் சான்றோரென்றும் சான்றோர்களை மதித்து அவர்கள் அடிச்சுவட்டை பின்பற்றுவதனால் தான் உலகத்தில் சமாதான வாழ்வு ஏற்படும் என்றும் கூறிய அவர் சமயவான்கள் அப்பர்சுவாமிகளைப் பின்பற்றியும் தேசத் தொண்டர்கள் மகாத்மாகாந்தியைப் பின்பற்றியும் வாழுவதற்கு முயலுதலே இப்போதைய சூழ்நிலையில் நாம் செய்ய வேண்டிய கடமை என வற்புறுத்தினார்.

---

## கள்ளக்கடத்தல் தபால் மூலம்

கோட்டை, சனி

இந்நாட்டினுள் தபால் சேவை மூலமாக கைக்கடிகாரங்களையும், ஆபாசப் படங்கள், பிரசுரங்கள், பவுண், டாலர் நோட்டுகள் என்பவற்றையும் கள்ளக்கடத்தல் செய்வதில் ஒரு கோஷ்டி திட்டமிட்டு இயங்கிவருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இங்கு வந்த வெளிநாட்டுப் பார்சல்களில் சிலவற்றில் இத்தகைய கள்ளக்கடத்தல் பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக சுங்க இலாகாவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## உற்சவம்

யாழ்ப்பாணம், சனி

இன்று தொல்புரம் மத்தி ஆதி முத்துமாரி அம்பாள் கொடியேற்ற உற்சவம் ஆரம்பமாகின்றது. உற்சவம் தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறும். பத்தாம்நாள் தீர்த்தோற்சவமும் அன்னதானமும் இடம்பெறும்.

புதிதாக வார்க்கப்பெற்ற அம்பாள் விக்கிரகத்தின் உற்சவம் இதுவே முதன் முறையாக நடைபெறுகிறது.

---

## இலவசகல்வி—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மூன்று துறைகளான ஏட்டுக்கல்வி தொழில் நுட்பக்கல்வி செய்முறைக்கல்வி என்பவற்றில் மாணவர்களை பயிற்றுவிப்பது என்றும் திட்டமிடப்பட்டுள்ளது. இதன்படி பொதுவாக மாணவர் கல்வி முடிந்ததும் தொழில் செய்யத் தக்கவாறு பயிற்றப்படவுள்ளனர். எஞ்ஜினியரிங் மருத்துவ முதலியவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவுமுள்ளது

## சந்தக்கவிஞர் சின்னையா நேற்று காலமானர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

தென்மராட்சியைச் சேர்ந்த சமூகத் தொண்டரும் சந்தக்கவிஞரும் தமிழ் அறிஞருமான புலவர் சின்னையா காலமாகிவிட்டார் கச்சாயைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் சாகித்தியமண்டலப் பரிசு பெற்றவர் கதிர்காமக் கந்தனைப் பற்றியும், மற்றும் பல தெய்வங்கள் பற்றியும் கவிதைகள் இயற்றி நூல் வடிவில் வெளியிட்டுள்ளார் சென்னையில் தமிழ் ஆராய்ச்சி மாநாடு நடைபெற்று அம்மகாநாட்டை யொட்டி நூலொன்று வெளியிட்டு பல அறிஞர்களின் பாராட்டைப் பெற்றார்

கொடிகாமம் திருநாவுக்கரசு மடாலய சபை உறுப்பினர்களில் ஒருவரான இவர் சமயத் தொண்டராகவும் சமூக சேவையாளராகவும் பணியாற்றினார் அண்மையில் இல்லறத்தில் அத்துவிதம் என்ற நூலை வெளியிட்டார்

புலவர் சின்னையா தென்மராட்சி சைவமகாசபை, பக்திநெறிக்கழகம், தமிழிசைச்சங்கம், மகாஜன சபை, தென்மராட்சி முத்தமிழ் மன்றம் போன்ற சங்கங்களின் போஷகராகவும் இருந்து சமூகப் பணியாற்றினவர்

இவர் காலஞ்சென்ற மீசாலை வித்துவான் ஏகாம்பரத்தாரிடமும் வீரசிங்க மகாவித்தியாலயத்திலும் "கந்தபுராண" விரிவுரை ஒழுங்காகக் கற்றவர்

வருடந்தோறும் மார்கழித் திருவெம்பாவை நடையஜனைகளைத் தானே முன்னின்று நடத்திவந்தார். தென்மராட்சியில் பல ஆலயங்களைப் புனருத்தாரணம் செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்கினார் (குவிம)

---

## காதுகேளாக் குழந்தைகளுக்கு...

லண்டன், மே 29

வாழ்க்கையில் ஒலி என்றால் என்ன என்பதை அறியாதவர்கள் இன்று பலர் இருக்கின்றனர். கேட்கும் புலனை இழந்த இம் மக்களுக்குத் தாம் உச்சரிக்கும் சொற்கள் அல்லது தம் வாயிலிருந்து வெளிப்படும் ஒலிகள் சரியா இல்லையா என அறிந்து கொள்ள முடியாத பரிதாபகரமான நிலை உள்ளது.

காதுகேளாக் குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக்கொடுக்க விசேஷ பாடசாலைகள் உலகம் முழுவதும் இருக்கின்றன. அவர்களுக்குப் படிப்பிக்கவென விஞ்ஞானிகளும் பொறியியலாளர்களும் ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுப் பல நவீன சாதனங்களை உருவாக்கி வருகின்றனர். இப்படிச் சமீபத்தில் உருவாக்கப்பட்ட 'புரட்சிகரமான' சாதனம் தான் ஒலி உருவப் பெட்டி!

பாடசாலைகளில் காதுகேளாப் பிள்ளைகள் ஒலியின் 'உருவங்களை' கண்டு அவற்றைப் பின்பற்றித் தாமே ஒவ்வொரு சொல்லையும் உச்சரிக்கப் பழகிக் கொள்ள இச்சாதனம் உதவுகிறது.

இச்சாதனத்தில் ஒவ்வொரு எழுத்தின் உச்சரிப்புக்கும் ஒரு உருவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு சொல் அமையப் பல "உருவங்கள்" ஒன்று சேர வேண்டும். காதுகேளாப் பிள்ளையின் முன் இருக்கும் எலக்ரோனிக் சாதனம், ஒரு படத்தை முன் வைத்து, அதனைக் குறிக்கும் சொல்லை 'உருவங்களாக' தொகுத்துக் காட்டும். அப்பிள்ளையின் வாயிலிருந்து வெளிப்படும் ஒலியையும் உருவங்களாக்கிக் காட்டுகிறது இச்சாதனம்

## உவர்தன்மை நீக்க நடவடிக்கை

கோட்டை, சனி

வடமேற்குப் பிராந்தியத்திலுள்ள மண்ணில் காணப்படும் 'அல்கலின்' உவர்த்தன்மையை நீக்க நீர்ப்பாசன மின்சக்தி நெடுஞ்சாலை அமைச்சு நடவடிக்கை எடுக்கவுள்ளது.

'அல்கலை' உவர்த்தன்மை நீக்கப் பெற்றபின் பல ஆயிரம் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதியளிக்கப்படும். இதற்காக 3 லட்சம் ரூபா செலவாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## வீதியின்நிலை

தாவடி, சனி

தாவடிப்பகுதியில் உள்ள ஐந்துவேம்படி ஒழுங்கை தாவடி தெற்கு ஒழுங்கை முதலியன மிகவும் சீர்கேடான நிலையில் இருப்பதால் போக்குவரத்துச் செய்வதில் மக்கள் மிகவும் கஷ்டமுறுவதாகத் தெரிகிறது.

## ஒருநாள்சம்பளம் வழங்கினர்

அம்பன், சனி

வடமராட்சி வடக்குக் கிழக்கு காரியாதிகாரி பிரிவைச் சேர்ந்த ஊழியர்கள் பயங்கரவாதிகளினால் பாதிக்கப்பட்டோருக்கென அரசாங்கத்தால் திரட்டப்படும் நிதிக்கு தங்கள் ஒருநாள் சம்பளத்தை வழங்கினர்.

## பஸ், ரயில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பல ஆண்டுகாலமாகவே பாவிக்கப்பட்டுவருகின்றன 5,105 சாமான் பெட்டிகள் தேவை 3 ஆயிரம் மட்டுமே இப்போது உள்ளன

3 ஆண்டுகளில் ரயில்வேப் பகுதிக்கு ஏற்பட்டுள்ள நஷ்டம் இப்படிக் கணக்கெடுக்கப்பட்டுள்ளது. 1968-69 வருடத்தில் 6 கோடி 40 லட்சம் நஷ்டம் ஏற்பட்டது. 1969-70ம் ஆண்டில் 6 கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டது. நடப்பு ஆண்டில் 7 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது.

1957-ம் ஆண்டில் ரயில் என்ஜின் ஒன்றைப் பழுது பார்க்க 21 ஆயிரம் ரூபா செலவு ஏற்பட்டது, ஆனால் இப்போது 45 ஆயிரம் ரூபா ஏற்படுகிறது ரயில் பெட்டி ஒன்றைப் பழுது பார்க்க 4 ஆயிரம் ரூபாய் அப்போது ஏற்பட்டது, இப்போது 8 ஆயிரம் ரூபாய் ஏற்படுகிறது,

இத்தகைய நிலையில் ரயில்வே கட்டணத்தை உயர்த்தவேண்டிய நிலை ஏற்பட்டது. இதே போன்று எயர்சிலோன் விமானக்கட்டணத்தையும் உயர்த்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

---

உடுப்பிட்டி, சனி

தானையடியில் புதிதாக விநாயகராலயமொன்று உருவாக்கப்பட்டு வருகின்றது இப்புதிய ஆலயத்திற்கான விக்கிரகங்களைச் செய்யும் வேலையில் திரு. இ இராமசேது தர்மகர்த்தா ஈடுபட்டுள்ளார் விரைவில் இவ்வாலய கும்பாபிஷேகம் நடைபெறவிருக்கிறது

---

மாணவர் மத்தியில்

## தேசப்பற்றை ஏற்படுத்த கல்வி அமைச்சர் விருப்பம்

கோட்டை, சனி

பாடசாலைப் பிள்ளைகளின் உள்ளங்களில் தேசப்பற்றுணர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் தீவிர இயக்கம் ஒன்றை நடத்துவதற்குக் கல்வி அமைச்சர் அல்ஹாஜ் பதியுதீன் முகம்மது முடிவுசெய்திருக்கிறார். அரசாங்கத்தின் செய்திப்பகுதியை அமைச்சர் இது விஷயத்தில் பயன்படுத்திக் கொள்ளவிரும்புகிறார்.

இன்றைய மாணவர்கள் மத்தியில் தேசிய உணர்ச்சி இல்லையென்றும் பாடசாலைக்கு செல்கையிலும் வருகையிலும் மட்டுமின்றி பாடசாலைகளில் இருக்கும்போதும் நாசவேலைகளில் மாணவர்கள் இறங்காமல் தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அமைச்சர் தெரிவித்திருக்கிறார்,

படத்தின் முன் இருக்கும் ஒலி 'உருவங்களைப்' போன்ற சரியான ஒலி உருவங்களை வாயால் மாணவன் உச்சரித்து அதனைக் காட்டும் திரையில் ஒப்பிட்டு, ஆசிரியரின் உதவியின்றித் தன்னைத் தானே திருத்திக் கொள்ள இச்சாதனம் உதவுகிறது.

பிரிட்டனில் இந்த எலக்ரோனிக் சாதனம் பரீட்சார்த்தமாகப் பாவிக்கப்பட்டபோது வாயைத் திறந்து ஒரு சொல்லையும் முழுமையாக உச்சரிக்கத் தெரியாத ஒரு நான்கு வயதுச் சிறுவன், முதல் நாளிலேயே ஒரு சொல்லை ஒரு பிழையும் இன்றி உச்சரித்து விட்டான் பிரிட்டிஷ் கடற்படையினர் தம் ஓய்வு நேரத்தின்போது உருவாக்கிய இச்சாதனத்திற்கு இன்று பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

......

## பூர்த்தி

அம்பன், சனி

நாகர் கோயில் மத்தியசந்தைக்கான கட்டிடவேலைகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளன. திறப்புவிழா இம்மாத இறுதியில் நடைபெறும்.

## மரண அறிவித்தல்

**கனந்தயா வல்லிபுரம்**

க. வல்லிபுரம் காலமாகிவிட்டார், வள்ளியம்மையின் கணவரும், சோமசுந்தரம் சண்முகராஜா, ஐயாத்துரை சிவராஜலிங்கம், பொன்னம்மா, இராசம்மா ஆகியோரின் தந்தையுமாவார் ஈமக்கிரியைகள் இன்று 30-5-71 பிற்பகல் 2-30 மணிக்கு வேலணை வெள்ளை கடற்கரை செம்பாடவன் மயானத்தில் நடைபெறும். தகவல்: வ. சண்முகராசா, வ. ஐயாத்துரை. 2489

## மரண அறிவித்தல்

**நாகம்மா இரகுப்பிள்ளை**

நாகம்மா இரகுப்பிள்ளை காலமாகிவிட்டார், இவர் இளைப்பாறியபுகையிரதநிலைய அதிபரின் அன்பு மனைவியும், காங்கேஸ், (இங்கிலாந்து) பரராஜசிங்கம் (புடவைக் கூட்டுத்தாபனம்), வாமதேவன் (நீர்ப்பாசன இலாகா), தியாகராசா (மின்சாரசபைக் கோப்பரேஷன்), சுந்தரேஸ்வரியின் தாயாரும், பத்மாவதி, சிவமணியின் மாமியாருமாவார். ஈமக்கிரியைகள் இன்று (30-5-71) நயினாதீவில் நடைபெறும். 2621

---

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட்டாருக்காக யாழ்ப்பாணம் கோவில் வீதி 63-ம் இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு மே மாதம் 29-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org